# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,328 — 1937 ம் ஞு ஐப்பசிமீ 29 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1901 ம் ஆண்டின் நாய் பதிவுச் சட்டம்.

**1901** ம் ஆண்டின் நாய் பதிவுச் சட்டத்தின் 5 ம் பிரிவுக்கமைய மன்னர் டிஸ்திறிக் சுகாதார சங்கங்களின் எல்லைகளுக்குள் வழங்குவதற்காக முறைமையான அதிகாரியால் ; அதாவது, மன்னர் சுகாதாரச் சங்கத் தலைவரினுல் ஆக்கப்பெற்ற உபவிதிகள்.

க. சித்தம்பலம்,
மன்னர் டிஸ்திறிக் சுகாதார சங்கத் தலைவர்.

மன்னர்,
1937 ம் ஞு ஆடிமீ 12 ந் டை.

உபவிதிகள்.

1. இந்த உபவிதிகளில் :—" தலைவர் " என்பது, மன்னர் டிஸ்திறிக் சுகாதார சங்கத் தலைவரையும் ; " மிருகப் பதிவுகட்டணம் " என்பது, குறித்த சட்டத்தின் 5 ம் பிரிவுக்கமைய வருடாவருடம் பதிவுக்காகக் கட்டவேண்டிய கட்டணத்தின் தொகையையும் ; " சொந்தக்காரன் " என்பது நாயையுடையவனுக அல்லது அதன் சொந்தக்காரனுக இருப்பவரையும், கருதும்.

2. மன்னர் சுகாதார சங்க எல்லைகளுக்குள் வளர்க்கப்படும் ஒவ்வொரு நாய்க்கும் வருடாந்தக் கட்டணம் :—

ஆண் நாய் ஒன்றுக்கு 25 சதம்.
பெண் நாய் ஒன்றுக்கு 50 சதம்.

3. இந்த வருடாந்தக் கட்டணம் எந்த வருடத்திற்குக் கொடுபட வேண்டுமோ அந்த வருடத்திலே மேமீ 1 ந் திகதிக்குமுன் சொந்தக்காரனுற் கொடுபட வேண்டும்.

4. இந்த வருடாந்தப் பதிவு கட்டணம் கொடுபட்டவுடன், தலைவர், அந்த நாயின் சொந்தக்காரனுக்குப் பின்னுற் கூறப்படுபவைகளைக் கொடுப்பார் :—

(i.) பதிவு செய்யப்பட்டதைப்பற்றிய ஒரு அறிக்கைப்பத்திரம் ;

(ii.) பதிவு இலக்கம் குத்தப்பெற்றதும் உலோகத்தாலாயதுமான ஒரு சீட்டு, அல்லது கழுத்துப்பட்டி ;

என்றுலும், பதிவு செய்வதற்கு விண்ணப்பம் பண்ணிக்கொள்ள வேண்டியதான நாயை, தனது பார்வைக்குக்கொண்டுவரும்படி, தலைவர் கேட்கலாம். பின் கூறப்படும் காரணங்களை முன்னிட்டு, அந்த நாய்க்குப் பதிவு அறிக்கைப்பத்திரமும் உலோகத்தாலாகிய சீட்டு அல்லது கழுத்துப்பட்டியும் கொடுக்க மறுக்கலாம் :—

(a) அந்த நாய் பார்வைக்குக் கொண்டுவரப்படாதிருப்பின் ; அல்லது

(b) அந்த நாய், தலைவருடைய அபிப்பிராயத்தில், சீவிப்பதற்கு யோக்கியதையற்ற விதமாக அங்கவீனப்பட்டு அல்லது நோய்கொண்டு இருப்பின் ; அல்லது

(c) அந்த நாய் சொந்தக்காரனுல் வழக்கமாக உபத்திரவம் செய்யப்பட்டு, அல்லது அலட்சியம் பண்ணப்பட்டு இருப்பின் ; என்பதாம்.

5. ஒரு நாய்க்குப் பதிவு அறிக்கைப்பத்திரம் கொடுத்தானதின்பின், அந்த நாயினுடைய சொந்தக்காரனின் விலாசத்திற்கு அறிவித்தலனுப்பியபின், தலைவர் அந்த அறிக்கைப் பத்திரத்தை அழித்துவிடலாம்.

இப்படிச் செய்வது பின்னுற் காணப்படும் காரணங்களைக் கொண்டேயாம் :—

(a) அந்த நாய் தலைவருடைய எண்ணத்தில், சீவிப்பதற்கு யோக்கியதை யற்றதாக அங்கவீனப்பட்டு அல்லது நோய்கொண்டதாகிவிடுதல் ; அல்லது

(b) அந்த நாய் சொந்தக்காரனுல் வழக்கமாக உபத்திரவப்படுத்தப்பட்டு, அல்லது அலட்சியம் பண்ணப்பட்டு இருத்தல் ; அல்லது

(c) அந்த நாய் தொற்றக்கூடிய அல்லது பரவக்கூடிய நோயினுற் பீடிக்கப்பட்டிருக்கும் காலத்தில் வேறு நாய்களுடன் ஊடாடுவதற்கு அதை அதன் சொந்தக்காரன் விடுதல் ; ஆகியனவாம்.

6. (1) மேலே கூறப்பட்ட 4 ம் இலக்க உபவிதியின்படி பதிவு அறிக்கைப்பத்திரம் பெருது இருப்பதும் ; அல்லது 5 ம் இலக்க உபவிதியின்படி அப்பதிவுப்பத்திரம் அழிக்கப்பெற்றதுமான நாயின் சொந்தக்காரன், தலைவர் அறிவித்தற்பத்திரம் அனுப்பியவுடன், அவ்வறிவித்தலிற் குறிக்கப்பட்டிருக்கும் நேரத்திலும், இடத்திலும் அந்த நாயைக்கொண்டு சென்று காட்டவேண்டும்.

(2) இப்படியான ஒவ்வொரு நாயும், தலைவர் தகுதியென்று எண்ணும் வகையில் அழிக்கப்பெற்று அல்லது வேறு வகையாக நீக்கப்பெறலாம்.

7. பதிவு அறிக்கைப்பத்திரம்பெற்று ஒரு உலோகச் சீட்டு அல்லது கழுத்துப்பட்டி கிடைக்கப்பெற்ற ஒவ்வொரு நாயும், அந்தச் சீட்டுப் பெலமுள்ளதாகவிருக்கும் காலம் முழுவதும், அந்தச் சீட்டை அல்லது கழுத்துப்பட்டியை அந்த நாய் அணிந்து இருக்கும்படியான எச்சரிக்கை கொள்ள வேண்டும்.

8. இந்த உபவிதிகளினுற் தனக்கு உரிய தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதையாவது எவருக்காவது எழுத்துமூலமாகத் தலைவர் கொடுக்கலாம்.

## காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நம்பர் 1,638, (அனுராதபுரம்).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிக்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1937 ம் ஆண்டு (ஒக்டோபர்) ஐப்பசிமீ 29 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரியதென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனல் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1937ம் ஆண்டு (ஒக்டோபர்) ஐப்பசிமீ 6 ந் தேதியிலன்று அனுராதபுரக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

டபிள்யு. ஒ. ஸ்ரீவன்ஸ்,
வடமத்திய மாகாண அரசாட்சி ஏசண்டர்.

குறிப்பு.—(a) இக்காணியைப்பற்றிய வேறு விபரம் வடமத்திய மாகாண கவண்மேந்து ஏசன்றரிடமும் அதன் அளவைப் படங்கள் நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணியிலுள்ள வழியுரித்து அக்காணிக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

அனுராதபுரம் நகர்சங்க எல்லைகட்குட்பட்ட நிசனிவா கிராமத்திலுள்ள கீழ்க்காணும் மெல்லைகட்குளடங்கிய காணித்துண்டு.

வடக்கு: T. S. P. 14 B படத்தின் 9 B ம் கண்டமும் F. S. P. 55 படத்தின் 24 A கண்டம்; கிழக்கு: T. S. P. 14 B படத்தின் 7 ம், 9 C ம் 8 ம், 9 ம், 13 ம் கண்டங்கள்; தெற்கு: T. S. P. 14 B படத்தின் 9 ம் கண்டம்; மேற்கு: F. S. P. 55 படத்தில் 5 ம் கண்டமும்.

வன அளவைப் பிரதமபடம் இல. 55.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 24 | திசவெவாக்கெல | 97 1 5 |

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நொம்பர் 1,639 (கேகாலே).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிக்கேனும் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1937 ம் ஞு (ஒக்டோபர்) ஐப்பசிமீ 29 ந தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியனசெய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனல் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1937 ம் ஞு (அக்டோபர்) ஐப்பசிமீ 6 ந் தேதியிலன்று கேகாலைக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

ஆர். அலுவிஹார,
உதவி அரசாட்சி ஏஜன்ற்.

குறிப்பு.—(a) இககாணியைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரத்தை கேகாலே உதவி அரசாட்சி ஏஜன்று அவர்களிடமும் அதன் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணியிலுள்ள வழியுரித்து அக்காணிக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

சபரகாம மாகாணம், கேகாலே டிஸ்திறிக், பெலிகல் கோறளே, கிரவெலி பற்று கிழக்கு தெதிகம கிராமத்திலிருக்கும் துண்டுக்காணியாவன :—

பிரதமபட இல. A 119.

| துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|
| 6 | கொட்டவிகாற டாகொப | 1 1 7·3 |

எல்லைகளாவன: வடக்கு-பீ. என். புஞ்சிகுருவாலும் இன்னொருவராலும் உரித்துச்சொல்லப்படும் மீகஹமுலவற்றவும் (பீ. பீ. ஏ. 119 துண்டு 2) முடிக்குரியதான கஹற்றகஹவற்றவும் (பீ. பீ. ஏ. 119 ல் துண்டு 3); கிழக்கு-முடிக்குரிய கஹற்றகஹவற்றவும் (பீ. பீ. ஏ. 119 ல துண்டு 3) பீ. எம். ஹெனறிக்சிங்கோவாலும் மற்றவர்களாலும் உரித்துச்சொல்லப்படும் விஹாறகாவ வற்றவும் (பீ. பீ. ஏ. 119 ல் துண்டு 4); தெற்கு-பீ. எம். ஹெனறிக்சிங்கோவாலும் மற்றவர்களாலும் உரித்துச் சொல்லப்படும் மினிகோனவற்ற (பீ. பீ. ஏ. 119 ல் துண்டு 5); மேற்கு பீ. என். புஞ்சிகுருவாலும் மற்றவர்களாலும் உரித்துச்சொல்லப்படும்-மீகஹமுலவற்ற (பீ. பீ. ஏ. 119 ல் துண்டு 2).

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அம்பத்தலாவ ஊருக்கு ஒரு சவக்காலைக்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

109 ம் கிராமப்பட்டத்தில் எடுக்கப்பட்ட பிரிவு இல. 1. குறிச்சி—அம்பத்தலாவ.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 30 | எற்றம்பகஹாமுளலந்த ஹெற்றகொடயலந்த | 2 வயதுத் தென்னம்பிள்ளைகள் 3 உள்ள சேனை | பிம்பிரிகொடகமகே, டொன் பெலிஸ் அப்புகாமி, தினியகல | 0 2 39·9 |
| 31 | ஷை | சேனை | ஷை | 0 0 4·3 |
| 32 | மல்லிகைத்தோட்டம் | 40 வயதுத் தேயிலே | ஆர். வீ. கே. கறுப்பையாப்பிள்ளை, மஸ்கேலியா | 0 0 14·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இத்தனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஞு (நொவெம்பர்) கார்த்திகை மாசம் 23 ந் தேதியிலன்று முற்பகல் 9 மணிக்கு கினிகத்தென்னைக் கிராமக் கோட்டில் என்முன்பாக வெளிப்படுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனல் அவர்களிடத்திற் கேட்கப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1937 ம் ஞு (ஒக்டோபர்) ஐப்பசிமீ 26 ந் உ.

எச். ஸீ. கொக்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு, கண்டி.

---

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நாவலப்பிட்டியில் ஒரு பின் ஒழுங்கை உண்டாக்கும் விஷயமாக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 414. குறிச்சி—நாவலப்பிட்டி நகரசங்க எல்லைக்குள்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 2 | 8 ம் இடாப்பு இலக்கக் காணியின் பகுதி | ஒரு சீமேந்து வக்கின் பகுதி, வாய்க்கால், சுவர் உள்ள வெறுங்காணி | என். கே. மொன்னு முகம்மட், நாவலப்பிட்டி | 0 0 0·75 |
| 3 | 7 ம் இடாப்பு இலக்கக் காணியின் பகுதி | ஒரு சீமேந்து வாய்க்காலும் சுவரும் அடங்கிய வெறுங்காணி | ஐ. எல். எம். ஷெறிப், நாவலப்பிட்டி | 0 0 0·33 |
| 4 | 6 ம் இடாப்பு இலக்கக் காணியின் பகுதி | ஷை | டி. எம. டி. சில்வாவின் மனைவி, நாவலப்பிட்டி | 0 0 0·83 |
| 5 | 183ம் இடாப்பு இலக்கக் காணியின் பகுதி | ஒரு சீமேந்து வாய்க்கால் உள்ள வெறுங்காணி | கே. கே. எம். மொகிதீன் மீராசாய்பு, நாவலப்பிட்டி | 0 0 0·97 |
| 8 | 181ம் இடாப்பு இலக்கக் காணியின் பகுதி | ஷை | நாவலப்பிட்டித் தமிழ்க் கோவிலின் நம்பிக்கைக் காப்பாளர் | 0 0 3·89 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தின 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஸூ (நொவெம்பர்) கார்த்திகை 23 ந் தேதியிலன்று முற்பகல் 11 மணிக்கு நாவலப்பிட்டி நகரசங்கக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1937 ம் ஸூ (ஒக்ரோபர்) ஐப்பசிமீ 26 ந் உ.

எச். சீ. கொக்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு, கண்டி.

---

1876 ம் ஸூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கல் உடைக்கும் இடத்திற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 421. குறிச்சி—பாலிப்பனே.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | அமுகேனவத்தை .. | 25 வயசுக்கு மேற்பட்ட ஒரு பிலாவும் ஒரு ஓட்டு வீடும் உள்ள தோட்டம் | பாலிப்பனேயில் வசிக்கும் டிசானுயக்க முடியான் செலாகே புஞ்சிவண்டா அப்புஹாமி, றம் மெனிக்கா, முத்துமெனிக்கா | 0 0 27·1 |
| 2 | ஷ | .. 25 வயதுக்கு மேற்பட்ட 2 பிலாவும், முதிர்ந்த கமுகுகளும், ஒரு பாதையின் பகுதியும், ஒரு பாறையும் உள்ள தோட்டம் | ஷ .. | 0 3 19·2 |
| 3 | ஷ | .. தோட்டமும் பாதையின் பகுதியும் .. | ஷ .. | 0 0 13·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஸூ (நொவெம்பர்) கார்த்திகை மாசம் 24 ந் தேதியிலன்று முற்பகல் 9 மணிக்கு எகெலகசீன்னப் பள்ளிக்கூடத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1937 ம் ஸூ (ஒக்ரோபர்) ஐப்பசிமீ 26 ந் உ.

எச். சீ. கொக்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு, கண்டி.

---

1876 ம் ஸூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பல்லேகம வாசமவுக்கு ஒரு சவக்காலைக்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 411. குறிச்சி—பல்லெகம பகாலகம்மெட்ட.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | குருக்கெதறேவத்தை .. | 10 வயதுள்ள 1 தென்னை, 10-20 வயதுள்ள 2 தோடை, 20 வயதுள்ள 5 கொக்கா, 5 வயதுள்ள 1 பருத்தி, 10 வயதுள்ள 1 எலுமிச்சை, 2 வயதுள்ள 16 பப்பாசி, 4 வயதுள்ள 2 செண்பக மரங்களுள்ள தோட்டம் | பல்லெகம்பஹாலகம்மெட்டவில் வசிக்கும் எம். ஆர். புஞ்சா அல்லது குணசேகரவினும் அவர் பெண் எம். ஆர். சீலாவதியின் மயினர் பிள்ளைகளான தூமபால, பேமாவதி, கல்யாணவதியும், கொழும்பு உவுல்பெண்டால் தெரு நம் 242 ம் வீட்டில் வசிக்கும் எம். முத்துக்குமாருவின் மேற்பார்வையில் எம். சோமசுந்தரமும் பல்லேகம்பகால கம்மெட்ட எம். ஆர். கப்புமலியும் | 0 2 36·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஸூ (நொவெம்பர்) கார்த்திகை மாசம் 30 ந் தேதியிலன்று முற்பகல் 8 மணிக்கு வளலை கமான் வங்களாவில் என்முபாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1937 ம் ஸூ (ஓகஸ்ட்) ஐப்பசிமீ 26 ந் உ.

எச். சீ. கொக்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு, கண்டி.

---

**1876 ம் ஸூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஹிக்கடுவை, கிரகண்டிகொடவுக்கு ஓர் பகிரங்க கக்கூசு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—**

**பிரதமபடத்து இல : A 535. குறிச்சி—ஹிக்கடுவை சுகாதார சங்க எல்லைக்குள் கிரகண்டிகொட.**

| துண்டு. | காணியினது பெயர் | விபரம் | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | மகாகம்மலவத்தை 303 ம் இல. மதிப்பின் பகுதி | 20 வயதுள்ள ஒரு புளிய மரமும், 20 வயதுள்ள 2 டோம்ப மரமும், உள்ள தோட்டம் | (1) கே. பி. வஸ்தியான், (2) கே. பி. அந்திரிஸ் சில்வா, (3) ஏ. பி. புஞ்சி நோனு, (4) பி. எல். ஏ. மெஞுசோகாமி, (5) வீ. டபிள்யு. எச். டி சில்வா, (6) எம். ஏ. வில்லியம் சிங்கோ, (7) டி. சி. ஏ. தேனிஸ்காமி, (8) டி. சி. ஏ. லயிசோஹாமி, (9) டி. சி. ஏ. அந்திரிஸ் சில்வா, (10) எஸ். கறோலிஸ் சில்வா, (11) கே. எச். கறோ அப்பு, (12) ஆர். எஸ். ஜயவாடின, (13) டி. எஸ். ஏ டபிள்யு. குணவாடின, (14) பி. ஜி. டி சில்வா, சகலரும் ஹிக்கடுவை. | 0 0 5·9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது எழுத்தில் அதிகரிக்கப்பட்ட அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஸூ (நொவெம்பர்) கார்த்திகை மாசம் 30 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1937 ம் ஸூ (ஒக்டோபர்) ஐப்பசிமீ 20 ந் உ.

ஏ. சீ. எம். ஹிங்லி
உதவி அரசாட்சி ஏசண்டு

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் டொருப்பேயில் பாடசாலை என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

சுருக்கம் 1. கிராமப்படத்து இல. 654. குறிச்சி—டொருப்பே.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | சபலங்கேவத்தை .. | தோட்டம், 40 வயதுள்ள 12 தென்னைகள், 20 வயதுள்ள 65 கமுகு, 20 வயதுள்ள 2 மா, 5 வயதுள்ள ஒரு டெல் மரம், 5 வயதுள்ள ஒரு எலுமிச்சை, 5 வயதுள்ள 2 கொய்யா மரம், 5 வயதுள்ள ஒரு இலுப்பை, 3 வயதுள்ள ஒரு நாறன் மரம், 3 வயதுள்ள 3 அனோடா மரம், 3 வயதுள் ஒரு முந்திரிகை, 3 வயதுள்ள, 4 கெண்டமரம், 3 வயதுள்ள ஒரு பருத்தி மரம், 3 வயதுள்ள ஒரு ஜம்பு மரம், 3 வயதுள்ள 5 பொம்மரம், ஒரு வயதுள்ள 66 கமுகு, ஒரு வயதுள்ள 12 அடி வாழை, 2 தற்காலிக மண் கட்டடமும், ஒரு தற்காலிக வைக்கோல் தொட்டிலும் உண்டு | ஏ. குணசேகர, டொருப்பே .. | 0 1 36·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது எழுத்தில் அதிகரிக்கப்பட்ட அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஆண்டு (நொவெம்பர்) கார்த்திகை மாசம் 30 ந் தேதியிலன்று காலை 10.30 மணிக்கு காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1937 ம் ஆண்டு (ஒக்ரோபர்) ஐப்பசிமீ 20 ந் உ.

ஏ. சீ. எம். ஹிங்லி,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கப்புகென்பொல கிராமச்சங்க ரோட்டு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 536. குறிச்சி—கப்புகென்பொல.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர் | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | கெக்குணகஹவத்தை .. | தோட்டம், 40 வயதுள்ள 22 தென்னை, 40 வயதுள்ள 19 கொடப்பொற, 40 வயதுள்ள 70 கமுகும், 25 வயதுள்ள 2 கிக்மரமும், 20 வயதுள்ள 2 பெடி டெல்மரமும், 20 வயதுள்ள ஒரு கம்பொட்டா மரமும், 12 வயதுள்ள ஒரு றபர்மரமும், 12 வயதுள்ள ஒரு சமண்டலையும், 12 வயதுள்ள 2 முந்திரிகையும், 12 வயதுள்ள ஒரு எரியாமரமும், 3-8 வயதுள்ள 5 கமுகம், 10 வயதுள்ள ஒரு கொறுக்காய் மரமும், 3 வயதுள்ள ஒரு டொங்கா மரமும், 3 வயதுள்ள டோவத்தை மரமும், ஒரு அடிப்பாதையில் ஓர் பகுதியும் | (1) மயோனிஸ் கொடகே, தோட்டகொட, (2) பேதிரிக்கொடகே, தோட்டகொட, (3) பபுன் கொடகே, தோட்டகொட, (4) ஹின்னிஹாமி கொடகே, வெல்வெல, (5) ஏ. ஜே. கொர்றணேலியா, கப்புகென்பொல, (6) றீ. டீ. எஸ். அபயவிக்கிரம, கொழும்பு | 0 1 12·9 |
| 2 | கெக்குனகஹவத்தை ஒவிற்ற | தென்னந்தோட்டம் 15 வயதுள்ள 5 தென்னையும், 8 வயதுள்ள 2 கோடபாரமரமும், ஒரு அடிப்பாதையின் ஒரு பகுதியும் | ஷெ | 0 0 5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது எழுத்தில் அதிகரிக்கப்பட்ட அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1937 ம் ஆண்டு (டிசெம்பர்) மார்கழி மாசம் 1 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு காலிக் கச்சேரியில என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம்சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1937 ம் ஆண்டு (அக்டோபர்) ஐப்பசிமீ 22 ந் உ.

ஏ. சீ. எம். ஹிங்லி,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் எல்பிற்றியா ஆஸ்பத்திரி இரண்டாவது அப்போதிகரிக்கு வீடு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 571. குறிச்சி—பேலண்டகொடை.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | கஹம்பிலியாகொடை-மனை | கறுவாத்தோட்டம், 20 வயதுள்ளது, அத்துடன் 20 வயதுள்ள 2 பலாவும் ஒரு வேய்ந்த மண்வீடும் | (1) ஸ்ரீமதி ரீ. பீ. விஜயகுணவாடின, பலப்பிட்டி, (2) எச். ஏ. எம். கருணரத்ன, (3) எச். ஈ. எம. கருணரத்ன, (4) எச். பி. எம். கருணரத்ன, சகலரும் றந்தொம்பை | 0 2 0·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது எழுத்தில் அதிகரிக்கப்பட்ட அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஆண்டு (டிசெம்பர்) மார்கழி மாசம் 1 ந் தேதியிலன்று காலை 10.30 மணிக்கு காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1937 ம் ஆண்டு (அக்டோபர்) ஐப்பசிமீ 21 ந் உ,

ஏ. சீ. எம். ஹிங்லி,
உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஷு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தென் மாகாணம் லுணுமோதறையில் ஓர் சுயபாஷா கலவன் பாடசாலை என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 573. குறிச்சி—லுணுமோதறை.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | குறுகொடவத்தை .. | தோட்டம், 30 வயதுள்ள 2 பலாவும், 30 வயதுள்ள 21 தென்னையும், 15 வயதுள்ள ஒரு மாவும், 4 வயதுள்ள 2 டியுல்மரமும், 2 கட்டடமும், ஒரு கிணறும் உண்டு | டீ. எஸ். குணசேகர, கோட்டெட, காலி | 0 2 16 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது எழுத்தில் அதிகரிக்கப்பட்ட அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஷு (டிசெம்பர்) மார்கழி மாசம் 1 ந் தேதியிலன்று காலை 11 மணிக்கு காலி கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1937 ம் ஷு (அக்டோபர்) ஐப்பசிமீ 21 ந உ.

ஏ. சீ. எம் ஹிங்லி,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஷு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நுங்கொமுவவில் ஓர் சிங்களக் கலவன் பாடசாலை ஸ்தாபித்தல் என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

படத்து இல. 416 ம் இலக்கக் கடைசிக் கிராமப்படத்தின் 1 ம் அனுபந்தம். குறிச்சி—வடமேன் மாகாணத்தில், குருணக்கல் டிஸ்திறிக்கில், தம்பதெனிஹற்பத்துவில், உடுகஹகோறளை கிழக்கில் உள்ள உடுமல்ல என்னும் கிராமம்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 46 | கொற்றகஹமுலவத்தவும் மக்குல்லகஹகொற்றுவே வத்தவும் | தென்னந்தோட்டம் .. | (1) நுங்கொமுவவைச்சேர்ந்த எம். றன்ஹாமி (பழைய ஆராய்ச்சி), (2) வில்கொமுவவைச்சேர்ந்த எஸ். பி. வில்கொமுவ (பதிவுகார உத்தியோகஸ்தர்) | 0 3 07 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஷு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஷு (நொவெம்பர்) கார்த்திகை மாசம் 25 ந் தேதியிலன்று மாலை 2.30 மணிக்கு பொல்காவலை வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருணக்கல் கச்சேரி,
1937 ம் ஷு (ஒக்ரோபர்) ஐப்பசிமீ 20 ந உ.

ஆர். எச். டீ. மெண்டேர்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு, குருணகல் டிஸ்திறிக்.

---

## டிஸ்திறிக் றோட் கொம்மிற்றி அங்கத்தவர்களை தெரிவுசெய்தல்.

இத்தா லறிவிக்கிறது 1861 ம் ஆண்டின் 10 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 26 ம் பிரிவின்படி 1938 ம், 1939 ம், 1940 ம் ஆண்டுளுக்கு நுவரக்களாவி டிஸ்திறிக் றோட் கொம்மிற்றியின் அங்கத்தவர்களாக வரும் உத்தியோகத்தை கேட்க நினைக்கும் யாபேரும் தங்கள் எண்ணத்தைத் தெரிவு நாளுக்குப் பத்து நாட்களுக்கு முன்னே வடமத்திய மாகாணப் பிரிவின்சியல் றோட் கம்மிற்றியின் சங்கத்தலைவருக்கு எழுத்தி லறிவிக்க வேண்டும்.

மேற்சொல்லிய கட்டளைச் சட்டத்தின் 27 ம் பிரிவின்படி நுவரகளாவி டிஸ்திறிக் றோட் கொம்மிற்றிக்கு மூன்று அங்கத்தவர்களை, 1937 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27 ந் திகதி காலை 10 மணிக்கு அனுராசபுரக் கச்சேரியில் தெரிவுசெய்யப்படும்.

டபிள்யு. ஓ. ஸ்டீவென்ஸ்,
பிறிவின்சியல் றோட் கொம்மிற்றிச் சங்கத்தலைவர்.

பிறவின்சியல் றோட்கொம்மிற்றிக் கந்தோர்,
அனுராசபுரம், 1937 ம் ஆண்டு ஐப்பசிமீ 25 ந உ

இத்தா லறிவிக்கிறதாவது 1861 ம் ஆண்டின் 10 இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 26 ம் பிரிவின்படி 1938 ம், 1939 ம், 1940 ம் ஆண்டுகளுக்கு தம்பங்கடவை டிஸ்திறிக் றோட் கொம்மிற்றியின் அங்கத்தவர்களாக வரும் உத்தியோகத்தைக் கேட்க நினைக்கும் யாபேரும் தங்கள் எண்ணத்தைக் தெரிவு நாட்களுக்குப் பத்து நாளைக்கு முன்னே வடமத்திய மாகாண பிரிவின்சியல் றோட் கொம்மற்றியின் சங்கத்தலைவருக்கு எழுத்தி லறிவிக்கவேண்டும். மேற்சொல்லிய கட்டளைச் சட்டத்தின் 27 ந் பிரிவின்படி தம்பங்கடவை டிஸ்திறிக் றோட் கொம்மிற்றிக்கு மூன்று அங்கத்தவர்களை 1937 ம் ஆண்டு மார்கழி மாசம் 1 ந் திகதி சாய்ந்தரம் 2 மணிக்கு பொல்லனருவை கிராம கோட்டில் தெரிவு செய்யப்படும்.

டப்லியு. ஓ. ஸ்டீவென்ஸ்,
பிறவின்சியல் றோட் கொம்மிற்றிச் சங்கத்தலைவர்.

பிறிவின்சியல் றோட் கொம்மிற்றிக் கந்தோர்,
அனுராசபுரம், 1937 ம் ஆண்டு ஐப்பசிமீ 25 ந உ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.